மஹஜன பெங்குவ | மக்கள் வங்கி

PEOPLE'S BANK

# கேள்விப்பத்திர அறிவித்தல்
# பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்ட மோட்டார் சைக்கிள்களை விற்பனை செய்தல்

வங்கி வசமுள்ள பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்ட 43 மோட்டார் சைக்கிள்களை விற்பனை செய்வதற்காக விலை விபரங்கள் கோரப்படுகின்றது.

| **கேள்விப்பத்திர இலக்கம்** | **பொருள்** | **கேள்விப்பத்திர விண்ணப்பம் (மீளச் செலுத்தப்படாத)** | **கேள்விப்பத்திர வைப்புத் தொகை (மீளச் செலுத்தும்)** | **கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி** |
|---|---|---|---|---|
| P-0149/2026 | மோட்டார் சைக்கிள் - 43 | ரூ.5,000.00 (ஒரு மோட்டார் சைக்கிளுக்காக) | ரூ. 25,000.00 | 2026.05.18ஆம் திகதி பி.ப.2.00 மணி |

1. கேள்விப்பத்திர விண்ணப்பங்களை 2026.04.27ஆம் திகதி முதல் 2026.05.15ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் முற்பகல் 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை இல: 30/101, கியூ வீதி, கொழும்பு 02 என்ற முகவரியில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் வழங்கல் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன், கேள்விப்பத்திரத்திற்காக ரூ.5,000/- மீளச் செலுத்தப்படாத கேள்விப்பத்திர வைப்புத் தொகையொன்றைச் செலுத்த வேண்டும். கேள்விப்பத்திர விண்ணப்பத்தைப் பெற்றுக்கொள்ளுவதற்காக குறித்த நிறுவனத்தின் கோரிக்கை கடிதத்தையும் இத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

2. இந்த 43 மோட்டார் சைக்கிள்கள் கொழும்பு 02, கியூ வீதி, இலக்கம் 30/101இல் அமைந்துள்ள மக்கள் வங்கியின் வழங்கல் திணைக்கள வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதோடு, 2026.04.27ஆம் திகதி முதல் 2026.05.15ஆம் திகதி வரை மு.ப.9.00 மணி முதல் பி.ப.2.00 மணி வரை பரீட்சித்துப் பார்க்க முடியும். (சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற்றும் வங்கி விடுமுறை தினங்களைத் தவிர்த்து)

3. கேள்விப்பத்திரம் சம்பந்தமாக ஏற்புடையதான நிபந்தனைகளும் நியதிகளும் கேள்விப்பத்திர விண்ணப்பத்துடன் வழங்கப்படும். 2026.05.18ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படுவதோடு, கேள்விப்பத்திர விண்ணப்பங்களை 2026.05.18ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னர் கொழும்பு 02, கியூ வீதி, இலக்கம் 30/101இல் அமைந்துள்ள மக்கள் வங்கியின் வழங்கல் திணைக்களத்தின், பாதுகாப்பு பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திர பெட்டியில் இட வேண்டும். அந் நேரத்தின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரர்கள் மாத்திரம் அந்தச் சந்தர்ப்பத்தில் கலந்துகொள்ள முடியும்.

4. மோட்டார் சைக்கிள்களை ஒப்படைப்பதற்கு முன்னர், எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அனைத்து அல்லது எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் மற்றும் எவ்வித காரணமும் காட்டாமல் கேள்விப்பத்திரமொன்றின் எந்தவொரு பகுதியையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை மக்கள் வங்கிக்கு உண்டு.

**பிரதம முகாமையாளர் (வழங்கல்)**
**மக்கள் வங்கி,**
**வழங்கல் திணைக்களம்,**
**30/101, கியு வீதி, கொழும்பு 02.**

**தொலைபேசி இலக்கம் : 2439577, 2439578**
**தொலைநகல் : 2439576**
**இணையத்தளம் : www.peoplesbank.lk**
**மின்னஞ்சல் : supplies@peoplesbank.lk**